அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.03/93(1)

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு.07
1993 ஏப்ரில் மாதம் 28ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசுக்கு உடைமையான நிறுவனங்களின்
தலைவர்கள் அனைவருக்கும்.

1993-மாகாண சபைகள் தேர்தல்கள் ஆளணியினரையும்
பொருட்களையும் கொண்டு செல்வதற்கான வாகனங்கள்.

---

1993, பெப்ரவரி 22ஆம் திகதிய 03/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக வெளியிடப்படுவது.

02. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பின்வரும் முடிவுகளுக்கு உங்கள் அவதானம் கோரப்படுகின்றது:-

அ. அரசாங்கம் குறைந்தது 50% பங்கு கொண்டுள்ளவையும், முகாமைக் கம்பனிகளால் முகாமை செய்யப்படும் அரசாங்கத்து உடைமையான தோட்டங்கள், மற்றும் பொதுக் கம்பனிகள் உட்பட அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், சட்டநியதிச் சபைகள், பிற அரசாங்க நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் வாகனங்களை, 1993.02.22ஆந் திகதிய 03/93ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு அமைவாகத் தேர்தல்கள் ஆணையாளருக்கு விடுவித்தல் வேண்டும்.

ஆ. தேர்தல்கள் ஆணையாளர் சம்பந்தப்பட்ட அமைச்சுச் செயலாளரின் விதப்புரை மீது ஒவ்வொரு அரச துறை அமைப்பு அல்லது நிறுவனம் அதன் இன்றியமையாத சேவைகளைப் பேணுவதற்குத் தேவையான ஆகக் குறைந்த எண்ணிக்கையான வாகனங்களை வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும்.

இ. இவ் அரசதுறை அமைப்புக்களாலும் நிறுவனங்களாலும் தேர்தல்கள் ஆணையாளருக்கு விடுவிக்கப்படும் வாகனங்கள் தொடர்பாக வாடகைக் கட்டணம் எதுவும் கொடுபடமாட்டாது. ஆயினும், தேர்தல்கள் ஆணையாளர் வழமைபோல் வாகனங்களுக்கான எரிபொருள், என்ணெய்ச் செலவு முதலியவற்றையும், சாரதிகளுக்கும் சுத்தப்படுத்துவோருக்குமான "பட்டா", மேலதிக நேர ஊதியம் அத்துடன் பிறபடிகள் ஆகியவற்றையும் கொடுப்பார்.

ஈ. 50%இலும் குறைவான பங்கொன்றை அரசாங்கம் கொண்டுள்ள பொதுக் கம்பனிகள் முதற்படியாகத் தேர்தல்கள் ஆணையாளருக்குத் தங்கள் வாகனங்களை விடுவிக்குமாறு கேட்கப்படுவார்கள். அவ்வாறு விடுவிக்கப்படும் வாகனங்களுக்குத் தேர்தல் ஆணையாளரால் நிர்ணயிக்கப்படும் ஒரு வாடகைக் கட்டணம் கொடுக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட முடிவுகளைச் செயற்படுத்தத் தயைபுரிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவும்.

ஒப்பம்: எம்.எச்.ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.